உ
ஓம் கணபதி துணை.

# அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்.

திரு/ திருமதி/ செல்வி :...............................................

## வருடாந்த பொதுக்கூட்டம்

மேற்படி மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 23.06.2019ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணிக்கு எமது அலுவலகத்தில் தலைவர் வைத்திய கலாநிதி. ம. அருங்கரன், அவர்களின் தலைமையில் நடைபெறும். தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**நிகழ்ச்சி நிரல்**

1. தேவாரம்.
2. தலைவர் உரை.
3. கடந்த பொதுச்சபைக் கூட்ட அறிக்கை வாசித்தலும் ஏற்றுக்கொள்ளலும்.
4. கடந்த வருட செயற்பாட்டு அறிக்கை சமர்ப்பித்தலும், ஏற்றுக்கொள்ளலும்.
5. கடந்த வருட நிதியறிக்கை சமர்ப்பித்தலும், ஏற்றுக்கொள்ளலும்.
6. மன்றத்தினை பதிவுசெய்வது தொடர்பாக கலாச்சார உத்தியோகத்தரின் உரை.
7. மன்றத்தின் யாப்பு வரைபினை பரிசீலித்தலும் தீர்மானித்தலும்.
8. வேறு பொருத்தமான விடயங்கள்.
9. நன்றியுரை.
10. தேவாரம்.

நன்றி.

..............................
Dr. ம. அருங்கரன்.
தலைவர்.
01.06.2019.

..............................
திரு. ஜெ. ஜசிந்தன்.
கௌரவ செயலாளர்.
01.06.2019.

Scanned by CamScanner

# அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்.

## செயற்பாட்டு அறிக்கை 07.04.2018 - 31.03.2019.

1973ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு எமது மக்களின் சமயம், கலாச்சாரம், கல்வி போன்றவற்றை வளர்ப்பதில் முன்னின்று உழைத்த எமது அரியாலை இளைஞர் இந்து மாமன்றம் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கடந்த பல வருடங்களாக செயற்பாடற்ற நிலையில் இருந்தது. இம்மன்றத்தினை மீண்டும் செயற்படுத்தும் முகமாக எந்திரி. திரு. வே. இரகுநாதன் மற்றும் அதிபர். திரு. அ. உபயசேகரம் ஆகியோரின் முயற்சியால் பொதுக்கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டு கடந்த 07.04.2018ஆம் திகதி சனிக்கிழமை காலை 09.30 மணிக்கு அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான முன்றலில் எந்திரி. திரு. வே. இரகுநாதன் அவர்களின் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இப்பொதுக்கூட்டத்தில் பதினோரு அங்கத்தவர்கள் பங்குபற்றியிருந்தார்கள். இப்பொதுக்கூட்டத்தில் வைத்திய கலாநிதி. ம. அருங்கரன், திரு. ஜெ. ஜசிந்தன், திரு. அ. பரமராஜா, திரு. த. பிரணவராவ், திருமதி. பி. ரமணஷாமினி ஆகிய ஐந்து அங்கத்தவர்கள் நிர்வாக உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டு இவ் ஐந்து உறுப்பினர்களும் பதினொரு உறுப்பினர்களை கொண்ட புதிய நிர்வாகம் ஒன்றினை தெரிவுசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இம்மன்றத்திற்கென உபவிதியொன்று உருவாக்கப்பட வேண்டும் எனவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

நிர்வாக உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்ட ஐந்து உறுப்பினர்களும் கடந்த 05.05.2018ஆம் திகதி சனிக்கிழமை இரவு 07.30 மணியளவில் அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான மண்டபத்தில் கூடி அதில் எதிர்வரும் 13.05.2018ஆம் திகதி காலை 10:00 மணிக்கு அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான மண்டபத்தில் திரு. அ. உபயசேகரம் அவர்களின் தலைமையில் மீண்டும் ஒரு பொதுக்கூட்டத்தினை கூடி அதில் வெற்றிடமாக உள்ள 06 புதிய நிர்வாக உறுப்பினர்களை தெரிவுசெய்வது எனவும், அப்பொதுக்கூட்டத்திற்கு அரியாலையில் உள்ள ஆலயங்களுடன் தொடர்புடைய த.ஹரிஷான்ந், உ.செந்தூரன், வி.பாலரூபன், சி.ஆறுமுகதாசன், இ.ப.மோகன்ஜித், இ.ஜயூரன், நி.கவிந்தன், து.துஸ்யந்தன், அ.தனுஸ்காந், நி.துஸ்யந்தன், சி.தேவகாந், ந.சுரேன், இ.ப.கரஞ்சித், ப.நவதீபன், ந.கோகுலன், த.கஜராவ், ம.கஜீவன், ஜெ.சதீசன், ர.சஞ்சீவன், ம.கபில்ராஜ், கு.நாமகள் ஆகிய இளைஞர்களுக்கு தனிப்பட்ட அழைப்பு விடுப்பது எனவும், மற்றும் அரியாலையில் உள்ள அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம், அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோவில், நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தானம், அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம், கொட்டுக்கிணறு பிள்ளையார் கோவில், கோப்பக்குளம் துறவடி பிள்ளையார் கோவில், அரியாலை கிழக்கு முத்து விநாயகர் கோவில், அரியாலை பேச்சியம்மன் கோவில் ஆகிய ஆலயங்களை பிரதிநிதித்துவப்படுத்தி அவ் ஆலய நிர்வாகத்தினரிடமிருந்து தலா இரு பிரதிநிதிகளை இப்பொதுக்கூட்டத்திற்கு அனுப்பிவைக்குமாறு கோரி அழைப்புக்கடிதம் அனுப்புவது எனவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு அவ்வாறே நடைமுறைப்படுத்தப்பட்டது.

கடந்த 13.05.2018ஆம் திகதி காலை 10.00 மணிக்கு அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான மண்டபத்தில் இரண்டாவது பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதில் செல்வி. கு. நாமகள், திரு. ர. சஞ்சீவன், திரு. ம. கஜீவன், திரு. இ. ப. மோகன்ஜித், திரு. ஜெ. சதீசன், திரு. சி. ஆறுமுகதாசன் ஆகிய ஆறு புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டு மொத்தமாக பதினோரு அங்கத்தவர்களை கொண்ட நிர்வாக உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள். தெரிவுசெய்யப்பட்ட பதினொரு அங்கத்தவர்களும் கூட்டம் கூடி தமக்கிடையில் பதவி நிலைகளை தெரிவுசெய்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் கணக்காய்வாளராக திரு. ச. சச்சிதானந்தன் அவர்கள் ஏகமாதாக தெரிவுசெய்யப்பட்டார்கள்.



Scanned by CamScanner

அன்றையதினமே பொதுக்கூட்டம் நிறைவடைந்ததும் முதலாவது நிர்வாகசபை கூட்டம் நடாத்தப்பட்டு பின்வருமாறு பதவிநிலைகள் தீர்மானிக்கப்பட்டு நிர்வாக செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டது.

| | |
|---|---|
| தலைவர் | வைத்திய கலாநிதி. ம. அருங்கரன் |
| கௌரவ செயலாளர் | திரு. ஜெ. ஜசிந்தன் |
| பொருளாளர் | திரு. த. பிரணவராவ் |
| உப தலைவர் | திரு. அ. பரமராஜா |
| உப செயலாளர் | திரு. ம. கஜீவன் |
| உப பொருளாளர் | திரு. ர. சஞ்சீவன் |
| அறநெறி இணைப்பாளர் | திரு. சி. ஆறுமுகதாசன் |
| பொருட் காப்பாளர் | செல்வி. கு. நாமகள் |
| நிர்வாக உறுப்பினர் - 1 | திருமதி. பி. ரமணசாமினி |
| நிர்வாக உறுப்பினர் - 2 | திரு. இ. ப. மோகன்ஜித் |
| நிர்வாக உறுப்பினர் - 3 | திரு. ஜெ. சதீசன் |

போசகர்களாக திரு. அ. உபயசேகரம் மற்றும் திரு. கு. குகதாசன் ஆகிய இருவரும் சபையால் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்கள்.

இக்காலப்பகுதியில் பொதுச்சபை உறுப்பினர்களாக இருபத்தாறு அங்கத்தவர்கள் இணைந்துள்ளனர்.

ஏழு நிர்வாக சபை கூட்டங்கள் கூட்டப்பட்டன. அதில் நிர்வாக உறுப்பினர்களின் பங்களிப்பு மிகவும் திருப்தியானதாக காணப்பட்டது.

## கோவில் திருவிழாக்கால நிகழ்ச்சிகள்.

எமது மன்றத்தின் முதலாவது நிகழ்ச்சியாக 19.05.2018ஆம் திகதி அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானத்தில் நடைபெற்ற சங்காபிஷேக இரவு திருவிழா நிறைவடைந்ததும் சைவப்புலவர். திரு. கண்ணதாசன் அவர்களின் சொற்பொழிவு நடைபெற்றது.

நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பகவிநாயகர் தேவஸ்தான மஹோற்சவத்தில் முதலாம்திருவிழா முதல் சப்பறத்திருவிழா வரை தொடர்ந்து எட்டு தினங்கள் எமது மன்றத்தின் ஏற்பாட்டில் சொற்பொழிவு சிறப்பாக நடைபெற்றது. மேலும் அங்கு நடைபெற்ற சமய அறிவு போட்டிக்கு எமது மன்றத்தால் விசேட பரிசில்களாக சைவசமய புத்தகங்கள் வழங்கப்பட்டது. இப்புத்தகங்களை எந்திரி. திரு. வே. இரகுநாதன் அவர்கள் எமக்கு அன்பளிப்பு செய்திருந்தார்கள்.

யாழ். அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோவில் 2018ஆம் ஆண்டு மஹோற்சவத்தில் முதலாம்திருவிழா முதல் சப்பறத்திருவிழா வரை தொடர்ந்து பதின்மூன்று தினங்கள் எமது மன்றத்தின் ஏற்பாட்டில் சொற்பொழிவும், கூட்டுப்பிரார்த்தனையும் (பஜனை) சிறப்பாக நடைபெற்றதுடன் தேர்த்திருவிழாவன்று மானியூர் முத்தமிழ் வில்லிசை குழுவினரின் வில்லுப்பாட்டும் சிறப்பாக நடைபெற்றது. மேலும், முதன்முறையாக மகாமாரி அம்மன் கோவிலில் சமய அறிவு போட்டி எமது மன்றத்தால் நடாத்தப்பட்டது. இப்போட்டியானது நான்கு பிரிவுகளாக நடாத்தப்பட்டது. இப்போட்டிக்கு 63 போட்டியாளர்கள் பங்குபற்றியிருந்தார்கள். இந்நான்கு பிரிவுகளிலும் முதல் மூன்று இடங்களை பெற்றவர்களுக்கு பரிசில்களாக சமயப் புத்தகங்களும், புத்தகசாலை வவுச்சர்களும் வழங்கப்பட்டன. இவை யாவற்றிற்கும் மகாமாரி அம்மன் கோவில் கொடியேற்றத்திருவிழா அன்னதான உபயகாரர்களாகிய இங்கிலாந்துவாழ் அம்பிகை அடியார்கள் அனுசரணை வழங்கியிருந்தார்கள். மேலும், தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் இத்தகைய



Scanned by CamScanner

நிகழ்ச்சிகளை நடாத்துமாறும், அவற்றுக்கு தாம் தொடர்ச்சியாக அனுசரணை வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்கள். சமய அறிவு போட்டியில் பங்குபற்றிய 63 போட்டியாளர்களுக்கும் ஊக்குவிப்பு பரிசாக திரு. சூ. அகிலன் அவர்களின் அனுசரணையில் ஒவ்வொரு புத்தகமும், திரு. அ. உபயசேகரம் அவர்களின் அனுசரணையில் ஒவ்வொருவருக்கும் தலா நூறு ரூபாய் பணப்பரிசிலும் வழங்கப்பட்டது.

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான 2018ஆம் ஆண்டு மஹோற்சவத்தில் முதலாம்திருவிழா முதல் சப்பறத்திருவிழா வரை தொடர்ந்து ஒன்பது தினங்கள் எமது மன்றத்தின் ஏற்பாட்டில் சொற்பொழிவும், கூட்டுப்பிரார்த்தனையும் (பஜனை) சிறப்பாக நடைபெற்றதுடன் தேர்த்திருவிழாவன்று சிறுப்பிட்டி சத்தியதாஸ் வில்லிசை குழுவினரின் வில்லுப்பாட்டும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகள் யாவற்றிற்கும் அரியாலையூர் இங்கிலாந்துவாழ் திரு. சீ. ஜீவேந்திரா அவர்கள் அனுசரணை வழங்கியிருந்தார்கள். மேலும், தீர்த்தத்திருவிழாவன்று அரியாலையூர் கீதவாகினி இசைக்கல்லூரியின் இசைக்கச்சேரி நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற்றது. இவ் இசைக்கச்சேரி நிகழ்ச்சிக்கு சித்திவிநாயகர் கோவில் தலைவர் எந்திரி. திரு. வே. இரகுநாதன் அவர்கள் அனுசரணை வழங்கியிருந்தார்கள். மேலும், வருடந்தோறும் நடாத்தப்படும் சமய அறிவு போட்டி இவ்வாண்டு எமது மன்றத்தின் பொறுப்பில் நடாத்தப்பட்டது. இப்போட்டியானது நான்கு பிரிவுகளாக நடாத்தப்பட்டது. இப்போட்டிக்கு 42 போட்டியாளர்கள் பங்குபற்றியிருந்தார்கள். இந்நான்கு பிரிவுகளிலும் முதல் மூன்று இடங்களை பெற்றவர்களுக்கு பரிசில்களாக சமயப் புத்தகங்களும், புத்தகசாலை வவுச்சர்களும் வழங்கப்பட்டன. மேலும் 40 புள்ளிகளுக்கு மேல் பெறுபேறு பெற்ற அனைத்து போட்டியாளர்களுக்கும் ஊக்குவிப்பு பரிசாக சமயப்புத்தகங்கள் வழங்கப்பட்டது. புத்தகப்பரிசுகள் யாவற்றையும் எந்திரி. திரு. திருமதி. வே. இரகுநாதன் அவர்கள் அன்பளிப்பு செய்திருந்தார்கள்.

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான சிவபெருமான் கோவிலின் 2019ஆம் ஆண்டு அலங்கார திருவிழாவின்போது தினமும் வசந்தமண்டப பூசை ஆரம்பிக்க முன்னர் கூட்டுப்பிரார்த்தனையும் (பஜனை) ஆறு நாட்கள் சொற்பொழிவும், அரியாலையூர் கீதவாகினி இசைக்கல்லூரியின் பல்லியம் (வாத்தியங்களின் சங்கமம்) நிகழ்ச்சியும், இசைக்கச்சேரி நிகழ்ச்சியும் மற்றும் அரியாலையூர் ஏழிசை மிருதங்க நர்த்தனாலயத்தின் பரதநாட்டிய நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகள் யாவற்றிற்கும் அரியாலையூர் நோர்வே வாழ் சித்திவிநாயகர் அடியார்கள் அனுசரணை வழங்கியிருந்தார்கள்.

## நவராத்திரி கால நிகழ்ச்சிகள்.

2018ஆம் ஆண்டு நவராத்திரி கால நிகழ்ச்சிகள் வரிசையில் மகாமாரி அம்மன் கோவில் கல்யாண மண்டபத்தில் கடந்த 12.10.2018ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 06:00 மணிக்கு மாணவர்களுக்கிடையிலான பஞ்சபுராணம் பண்ணுடன் ஓதும் போட்டி நடாத்தப்பட்டது.

14.10.2018ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 03.00 மணிக்கு நவராத்திரி பூசை வழிபாடும், பஞ்சபுராணம் பண்ணுடன் ஓதும் போட்டியில் முதலிடம் பெற்றவர்களின் பண்ணிசை நிகழ்ச்சியும், சைவப்புலவர். திரு. நா. நவராஜ் அவர்களின் "சிறந்த சொற்பொழிவாளர் ஆகுதல்" என்னும் கருத்தரங்கும், அரியாலையூர் கீதவாஹினி இசைக்கல்லூரி மாணவர்களின் பல்லியம் (வாத்தியங்களின் சங்கமம்) நிகழ்ச்சியும், இறுதியாக பரிசில் வழங்கல் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

இவ் நவராத்திரி கால நிகழ்ச்சியின் பூசை வழிபாட்டிற்காக எமது இளைஞர்களின் அர்ப்பணிப்பான செயற்பாட்டால் மிகவும் சிறப்பான முறையில் 12 அடி உயரத்தில் 8 அடுக்குகள் கொண்ட அழகிய கொலுமேடை ஒன்று அமைக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டது.



Scanned by CamScanner

## சிவராத்திரி கால நிகழ்ச்சிகள்.

04.03.2019ஆம் திகதி திங்கட்கிழமை சிவராத்திரி தினத்தன்று அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான சிவன் கோவிலில் இரவு 10.30 மணிக்கு சொற்பொழிவும், இரவு 11.15 மணிக்கு கூட்டுப்பிரார்த்தனையும் (பஜனை) சிறப்பாக நடைபெற்றது.

## யாப்பு அமைத்தல்.

எமது மன்றத்திற்கு யாப்பு அமைப்பது தொடர்பாக, தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோருடன் மன்றத்தின் போசகர்களான திரு. அ. உபயசேகரம் மற்றும் திரு. கு. குகதாசன் ஆகியோரையும் இணைத்து யாப்பு உபகுழு ஒன்று அமைக்கப்பட்டு அக்குழுவால் புதிய யாப்பு வரைபு ஒன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## மன்றத்தினை பதிவுசெய்தல்.

எமது மன்றத்தினை பதிவுசெய்வது தொடர்பாக, எமது மன்றம் 1973ஆம் ஆண்டு விஜயதசமி தினத்தன்று ஆரம்பிக்கப்பட்டது என அறியமுடிந்தாலும் அதற்கான பதிவுகள் கிடைக்கப்பெறாமையால் எமது மன்றத்தினை புதிதாக பதிவுசெய்வது என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. மேலும், அடுத்த பொதுக்கூட்டத்தில் மன்றத்தினை பதிவுசெய்வதற்கு ஏற்றவகையில் உரிய அலுவலர்களை பொதுக்கூட்டத்திற்கு அழைத்து பதிவுசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

## மன்றத்தின் அலுவலகம்.

எமது மன்றத்திற்கென ஒரு அலுவலகம் தேவை எனவும், அதற்காக சித்திவிநாயகர் கோவிலின் முன்வளைவுக்கு அருகில் அமைந்துள்ள சித்திவிநாயகர் கோவிலின் பெயரில் உள்ள காணியில் திருமதி. தேவகி தனராசா அவர்களின் பொறுப்பில் கட்டப்பட்டு தற்போது பாவனையற்ற நிலையில் காணப்படும் கட்டடத்தினை எமது மன்றத்தின் அலுவலக பாவனைக்கு பெற்றுக்கொள்வது தொடர்பாக கோவில் நிர்வாகத்துடனும், திருமதி. தேவகி தனராசா அவர்களுடனும் தொடர்புகொண்டு அவர்களின் அனுமதியுடன் கடந்த 09.12.2018ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் பால் காய்ச்சப்பட்டு அலுவலக திறப்பு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவின்போது விழாவிற்கு வருகைதந்த எமது மூத்த அங்கத்தவர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டு அதில் பல ஆலோசனைகளும் பெறப்பட்டது.

மக்களுடனான தொடர்பாடல் பணிகளுக்காக ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 06.30 மணி முதல் இரவு 07.00 மணி வரை எமது அலுவலகம் திறந்து வைக்கப்பட்டிருக்கும்.

எமது அலுவலக திறப்பு விழாவையடுத்து எமது அலுவலகத்தின் முதலாவது தைப்பொங்கல் பெருவிழா கடந்த 15.01.2019ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தைப்பொங்கல் தினத்தன்று சிறப்பான முறையில் பல இளைஞர்களின் ஒத்துழைப்புடன் பொங்கல் பொங்கி கொண்டாடப்பட்டது.

## யோகா கலை பயிற்சி வகுப்புகள்.

எமது மன்றத்தின் யோகா கலை பயிற்சி வகுப்புகள் கடந்த 21.01.2019ஆம் திகதி திங்கட்கிழமை தைப்பூச தினத்தன்று காலை 06.00 மணிக்கு எமது அலுவலகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இவ் யோகா கலை பயிற்சி வகுப்பிற்கு வளவாளராக திரு. சி. உமாசுதன் அவர்கள் பயிற்சி வழங்குகின்றார். இவ் யோகா கலை பயிற்சி வகுப்பிற்கு அனுசரணையாளர்களாக அமரர்களான



Scanned by CamScanner

செல்லம்மா நடராஜா மற்றும் பண்டிதர் தம்பு சரவணமுத்து ஆகியோரின் ஞாபகார்த்தமாக திரு. நடராஜா நேதாஜி மற்றும் திருமதி. புவனேஸ்வரி சரவணமுத்து ஆகிய இருவரும் அனுசரணை வழங்குகின்றார்கள்.

## புத்தகங்கள் வெளியீடு.

அடியார்கள் பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு பிள்ளையார் கதை புத்தகங்களை சித்திவிநாயகர் கோவிலுக்கும் மற்றும் கற்பகவிநாயகர் கோவிலுக்கு வரும் அடியவர்களுக்கும், திருவெம்பாவை புத்தகங்களை சித்திவிநாயகர் கோவில், கற்பகவிநாயகர் கோவிலுடன் மகாமாரி அம்மன் கோவிலுக்கும் அடியவர்களுக்கும் வழங்கப்பட்டன. இப்புத்தகங்களை திரு. அ. உபயசேகரம் அவர்கள் எமக்கு அன்பளிப்பு செய்திருந்தார். தோத்திரத்திரட்டு புத்தகம் கடந்த 09.04.2019ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சதுர்த்தி தினத்தன்று சித்திவிநாயகர் கோவிலில் வெளியிடப்பட்டது. இப்புத்தகத்திற்கு திருமதி. தாரணி மகாலிங்கம் அவர்கள் அனுசரணை வழங்கியிருந்தார்கள்.

## மன்றத்தின் எதிர்கால செயற்திட்டங்கள்.

1. தீட்சை வழங்கும் நிகழ்வு நடாத்துதல்.
2. மன்றத்தினை பதிவுசெய்தல்.
3. வங்கிக்கணக்கு ஆரம்பித்தல்.
4. கூட்டுப்பிரார்த்தனைக்குழு (பயனைக்குழு) அமைத்தல்
5. அலுவலகத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல்.
6. அறநெறி பாடசாலைகளை ஊக்குவித்தல்.
7. பக்கவாத்திய கருவிகளை இயக்க பழக்கும் வகுப்புகளை நடாத்துதல்.

## நன்றிகள்.

- எமது மன்றத்திற்கு அனுசரணை வழங்கிய அனைத்து அனுசரணையாளர்.
- சமய நிகழ்ச்சிகளை நடாத்த அனுமதித்த கோவில் நிர்வாகத்தினர்.
- சொற்பொழிவாளர்களை ஒழுங்குபடுத்தி தந்த சைவப்புலவர். திரு. ந. நவராஜ்.
- கலை நிகழ்ச்சிகளை நடாத்தித்தந்த அரியாலையூர் கீதவாஹினி இசைக்கல்லூரி மற்றும் அரியாலையூர் ஏழிசை மிருதங்க நர்த்தனாலயம்.
- யோகா கலை பயிற்சி வகுப்பு வளவாளரான திரு. சி. உமாசுதன்.
- அலுவலக காணி மற்றும் கட்டடம் வழங்கியவர்களான சித்திவிநாயகர் கோவில் நிர்வாகம் மற்றும் திருமதி. தேவகி தனராசா.
- எமது மன்றத்தின் செயற்பாடுகளில் பற்குகொள்ளும் அனைத்து அரியாலையூர் இளைஞர்கள்.
- அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

*நன்றி.*

| | |
|---|---|
| ........................ | ........................ |
| *Dr. ம. அருங்குரன்.* | *திரு. ஜெ. ஜசிந்தன்.* |
| *தலைவர்.* | *கௌரவ செயலாளர்.* |

***அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்.***
***01.06.2019.***



Scanned by CamScanner

உ
ஓம் கணபதி துணை.

# அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்.

## 07.04.2018 தொடக்கம் 31.03.2019 வரையான காலப்பகுதிக்கான கொள்ளல் கொடுத்தல் கணக்கு அறிக்கை.

| கொள்ளல் விபரம் | தொகை | கொடுத்தல் விபரம் | தொகை |
|---|---|---|---|
| அங்கத்தவர் சந்தா | 22,500.00 | சித்திவிநாயகர் சங்காபிஷேக நிகழ்ச்சி | 2,000.00 |
| அன்பளிப்பு | 159,700.00 | கற்பகவிநாயகர் தேவஸ்தான மஹோற்சவ நிகழ்ச்சி | 4,000.00 |
| | | மகாமாரி அம்மன் கோவில் மஹோற்சவ நிகழ்ச்சி | 45,340.00 |
| | | சித்திவிநாயகர் தேவஸ்தான மஹோற்சவ நிகழ்ச்சி | 36,390.00 |
| | | சிவன் கோவில் திருவிழா நிகழ்ச்சி | 34,500.00 |
| | | நவராத்திரி கால நிகழ்ச்சிகள் | 26,107.00 |
| | | அலுவலக திறப்பு விழா | 18,105.00 |
| | | யோகா கலை பயிற்சி வகுப்பு | 13,750.00 |
| கைப்பொறுப்பு | 1,487.00 | காகிதாகிகள், நானாவித செலவு | 3,495.00 |
| | **183,687.00** | | **183,687.00** |

*Dr. ம. அருங்கரன்.*
*தலைவர்.*

*திரு. த. பிரணவராவ்.*
*பொருளாளர்.*

# அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்.

## 07.04.2018 முதல் 31.03.2019 வரையான கணக்கறிக்கை.

அரியாலை இளைஞர் இந்து மாமன்றம் 07.04.2018 முதல் 31.03.2019ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குரிய கணக்கு அறிக்கையில் தரப்பட்ட வரவு புத்தகம் இல 1, 2 மற்றும் செலவு பதிவுகள் என்பன உரிய முறையில் பதியப்படுள்ளது.

திரு. வி. சச்சிதானந்தன்.
கௌரவ கணக்காய்வாளர்.



Scanned by CamScanner

## கொள்ளல் விபரம்.

| அங்கத்தவர் பெயர் | சந்தா தொகை |
|---|---|
| ம. அருங்ககரன் | 1,000.00 |
| கு. சாமின் | 1,000.00 |
| ம. கஜீவன் | 1,000.00 |
| ஜெ. ஜசிந்தன் | 1,000.00 |
| த. பிரணவராவ் | 1,000.00 |
| ஜெ. சதீசன் | 1,000.00 |
| கு. நாமகள் | 1,000.00 |
| சுப்பையா சண்முகரட்ணம் | 1,000.00 |
| பரமசாமி அருளம்பலம் | 1,000.00 |
| அப்பாத்துரை உபயசேகரம் | 1,000.00 |
| சோ. இராசா | 1,000.00 |
| ந. குகதாசன் | 1,000.00 |
| செ. ஜெயபாலன் | 1,000.00 |
| நந்தினி மோகனதாஸ் | 1,000.00 |
| ஆறுமுகதாசன் | 1,000.00 |
| ச. உருத்திரேஸ்வரன | 1,000.00 |
| சின்னையா செல்வரத்தினம் | 1,000.00 |
| ப. மோகன்ஜித் | 1,000.00 |
| ஏரம்பு ஜெயக்குமார் | 1,000.00 |
| இ. ஐயூரன் | 500.00 |
| நி. துஷ்யந்தன் | 500.00 |
| இ. ரிஷீபா | 500.00 |
| இ. பிரதீபா | 500.00 |
| உபயசேகரம் கோபி | 500.00 |
| ந. சுரேன் | 500.00 |
| த. ஹரிஷான்ந் | 500.00 |
| **மொத்தம்** | **22,500.00** |

| அன்பளிப்பாளர் பெயர் | அன்பளிப்பு தொகை |
|---|---|
| இங்கிலாந்து வாழ் அம்பிகை அடியார்கள் | 40,000.00 |
| புவனேஸ்வரி சரவணமுத்து | 24,000.00 |
| சீ.ஜீ வேந்திரா - லண்டன் | 20,000.00 |
| அ. உபயசேகரம் | 7,700.00 |
| ந. உருத்திரேஸ்வரன் | 5,000.00 |
| ஏஸ். ரி. பத்மநாதன் | 5,000.00 |
| தர்மினி உமாசெல்வன் - லண்டன் | 5,000.00 |
| அருளானந்தம் சர்மா | 5,000.00 |
| சூடாமணி அகிலன் | 5,000.00 |
| பாலேந்திரா - லண்டன் | 5,000.00 |
| கீதா கணேசநாதன் - லண்டன் | 5,000.00 |
| ஜேகன்மோகன் | 5,000.00 |
| முத்தையா ஜதிந்திரா - கனடா | 5,000.00 |
| வே. இரகுநாதன் | 5,000.00 |
| ந. குகதாசன் | 2,000.00 |
| ஏஸ். கமலநாதன் | 2,000.00 |
| கணேஷ் நோர்வே | 2,000.00 |
| ந. வாகீசன் | 2,000.00 |
| எஸ். பவான் | 2,000.00 |
| ரவிச்சந்திரன் சதீஸ் - லண்டன் | 2,000.00 |
| அரியாலை இந்து இளைஞர்கள் | 2,000.00 |
| மு. அருங்கரன் | 1,000.00 |
| சி. செல்வரத்தினம் | 1,000.00 |
| கோ. உருத்திரன் | 1,000.00 |
| ப. ஸ்ரீஸ்கந்தன் | 1,000.00 |
| **மொத்தம்** | **159,700.00** |



Scanned by CamScanner

## கொடுத்தல் விபரம்.

| கொடுப்பனவு விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| சித்திவிநாயகர் சங்காபிஷேக நிகழ்ச்சி | | 2,000.00 |
| கற்பகவிநாயகர் திருவிழா சொற்பொழிவு | | 4,000.00 |
| மகாமாரி அம்மன் கோவில் மஹோற்சவ நிகழ்ச்சி | | |
| விளம்பர பதாகை, துண்டுப்பிரசுரம் | 1,700.00 | |
| பரீட்சை தாள் | 450.00 | |
| பரிசு | 14,190.00 | |
| சொற்பொழிவு | 13,000.00 | |
| வில்லுப்பாட்டு | 15,000.00 | |
| உபசரணை | 400.00 | |
| பொன்னாடை | 600.00 | 45,340.00 |
| சித்திவிநாயகர் மஹோற்சவ நிகழ்ச்சி | | |
| விளம்பர பதாகை, துண்டுப்பிரசுரம் | 1,450.00 | |
| பரீட்சை தாள் | 440.00 | |
| பரிசு | 4,500.00 | |
| சொற்பொழிவு | 8,000.00 | |
| வில்லுப்பாட்டு | 18,000.00 | |
| இசைக்கச்சேரி | 4,000.00 | 36,390.00 |
| சிவன் கோவில் திருவிழா நிகழ்ச்சி | | |
| விளம்பர பதாகை, துண்டுப்பிரசுரம் | 500.00 | |
| சொற்பொழிவு | 6,000.00 | |
| பல்லியம் | 9,000.00 | |
| இசைக்கச்சேரி | 5,000.00 | |
| பரதநாட்டியம் | 14,000.00 | 34,500.00 |
| நவராத்திரி விழா | | |
| விளம்பர பதாகை, அழைப்பிதழ் | 1,250.00 | |
| பரிசு | 5,650.00 | |
| உபசரணை | 7,457.00 | |
| பொன்னாடை | 1,200.00 | |
| பல்லியம் | 3,000.00 | |
| ஒலி, ஒளி அமைப்பு | 4,000.00 | |
| வளவாளர் | 2,000.00 | |
| பூசைப்பொருட்கள் | 1,550.00 | 26,107.00 |
| அலுவலக திறப்பு விழா | | |
| பெயர்ப்பதாகை, அழைப்பிதழ் | 1,050.00 | |
| உபசரணை | 1,660.00 | |
| துப்பரவு செய்தது, வர்ணம் பூசியது | 6,200.00 | |
| பூசைப்பொருட்கள் | 2,500.00 | |
| சுவாமிப்படம் | 2,300.00 | |
| அலுவலக பொருட்கள் | 1,565.00 | |
| அலுவலக மின்சார செலவு | 2,830.00 | 18,105.00 |
| யோகா கலை பயிற்சி வகுப்பு கொடுப்பனவு | | |
| வேதனம் (தை, மாசி) | 11,000.00 | |
| பாய் கொள்வனவு | 2,750.00 | 13,750.00 |
| காகிதாகிகள், நானாவித செலவு | | 3,495.00 |
| **மொத்த கொடுப்பனவு** | | **183,687.00** |



Scanned by CamScanner

உ
ஓம் கணபதி துணை.

# அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்.

# அமைப்பு விதிகள் (வரைபு - 22.07.2018)

1. பெயர் : அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்.

2. முகவரி : அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம், அரியாலை, யாழ்ப்பாணம்.

3. நோக்கம் : "அரியாலை மக்களை சைவ சித்தார்ந்த வழியில் செல்ல உழைத்தல்".

4. இலட்சனை : நடராஜர் உருவத்தை மையமாக கொண்டு அமைந்திருத்தல் வேண்டும்.

5. நிறம் : மஞ்சலில் சிவப்பு.

6. **அங்கத்துவத்திற்கான தகைமைகள் :**
   அ. இந்தசமயத்தை சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்.
   ஆ. இந்துசமய கோட்பாடுகளையும் வழிபாட்டு முறைகளையும் ஏற்றுக்கொள்பவராக இருத்தல் வேண்டும்.
   இ. சந்தாப்பணம் செலுத்தியவராக இருத்தல் வேண்டும்.
   ஈ. நிர்வாகசபையால் அங்கிகரிக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

7. **அங்கத்துவ வகைகளும், வரையறைகளும்.**
   அ. முகாமைத்துவ அங்கத்தவர்கள்.
      i. 50 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
      ii. இந்துதர்மத்தை வளர்ப்பதில் ஊக்கத்துடன் செயற்பட வேண்டும்.
      iii. சமூகத்தால் இதயபூர்வமாக மதிக்கத்தக்க விதத்தில் மனச்சாட்சியுடனும், முன்மாதிரியான வாழ்க்கை நெறியை கடைப்பிடிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
   ஆ. கௌரவ அங்கத்தவர்கள்.
      i. நிர்வாகசபையில் இடம்பெற முடியாது.
      ii. பொதுக்கூட்டத்தில் பங்குபற்றி ஆலோசனை வழங்க முடியும்.
      iii. மன்றம் நடாத்தும் வைபவங்களில் பங்குபற்றி ஊக்குவித்தல்.
      iv. இயன்றளவு நன்கொடைகளை வழங்கி இந்துதர்மம் வளர உதவி செய்தல்.

8. **அங்கத்துவ சந்தா பணம்.**
   அ. முகாமைத்துவ அங்கத்துவ வருடாந்த சந்தா பணம் ஐநூறு ரூபாய் (500.00)
   முகாமைத்துவ அங்கத்துவ ஆயுள் சந்தா பணம் ஐந்தாயிரம் ரூபாய் (5,000.00)
   ஆ. கௌரவ அங்கத்துவ வருடாந்த சந்தா பணம் ஆயிரம் ரூபாய் (1,000.00)
   கௌரவ அங்கத்துவ ஆயுள் சந்தா பணம் பத்தாயிரம் ரூபாய் (10,000.00)

9. **பொதுச்சபையின் கடமைகள்.**
   அ. நிர்வாகசபை உறுப்பினர்கள் பதினோரு (11) பேரை தெரிவுசெய்தல்.
   ஆ. நிர்வாகசபைக்கு ஆலோசனைகளையும் அறிவித்தல்களையும் வழங்குதல்.
   இ. கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட வருடாந்த கணக்கறிக்கையையும், பொதுக்கூட்ட அறிக்கையையும், செயல் அறிக்கையையும் அங்கிகரித்தல்.
   ஈ. கணக்காய்வாளரை தெரிவுசெய்தல்.
   உ. கூட்ட நிறைவெண் இருபத்தொன்று (21).

10. **நிர்வாகசபையின் கடமைகள்.**
   அ. மன்றத்தை மூன்று (03) ஆண்டுகள் நிர்வகித்தல்.
   ஆ. தீர்மானங்களை நிறைவேற்றலும், செயற்படுத்தலும்.
   இ. வரவு, செலவுகளை அங்கிகரித்தல்.
   ஈ. மாதமொருமுறை நிர்வாகசபை கூட்டம் கூட்டுதல்.
   உ. பதவி வெற்றிடங்களை நிரப்புதல்.
   ஊ. பதவிகளுக்கான தெரிவினை மேற்கொள்ளல்.
   எ. கூட்ட நிறைவெண் ஆறு (06).



Scanned by CamScanner

## 11. நிர்வாக பதவிகள்.

11.1 தலைவர் – 01
செயலாளர் – 01
பொருளாளர் – 01
உப தலைவர் – 01
உப செயலாளர் – 01
ஏனைய உறுப்பினர்கள் – 06

### 11.2 தலைவரின் கடமைகள்.

அ. மன்றத்தின் முகாமைத்துவ அதிகாரியாக செயற்படல்.
ஆ. கூட்டங்களுக்கு தலைமைதாங்குதல்.
இ. விசேட நிர்வாகசபை, விசேட பொதுக்கூட்டங்களை கூட்டுதலும் தலைமை தாங்குதலும்.
ஈ. செலவினங்களை அங்கிகரித்தல்.
உ. தற்துணிவுடன் தீர்மானங்களை மேற்கொண்டு செயற்படுத்தியபின் நிர்வாகசபையின் அங்கிகாரத்தை பெறுதல்.

### 11.3 செயலாளரின் கடமைகள்.

அ. தலைவரின் ஆலோசனைப்படி கூட்டங்களை கூட்டுதல்.
ஆ. நிர்வாகசபையின் இரண்டில் ஒன்று ( $^1/_2$ ) உறுப்பினர்களினதும், பொதுச்சபையின் மூன்றில் இரண்டு ( $^2/_3$ ) உறுப்பினர்களினதும் வேண்டுகோளுக்கு இணங்க கூட்டங்களை கூட்டுதல்.
இ. அறிக்கைகளை எழுதி நிர்வாகசபையில் சமர்ப்பித்து அங்கிகாரம் பெறுதல்.
ஈ. அங்கத்தவர் பட்டியலை பேணுதல்.
உ. நிர்வாகசபையினதும், பொதுச்சபையினதும் கூட்ட தீர்மானங்களை செயற்படுத்தல்.
ஊ. நிர்வாகசபை கூட்டங்களை மூன்று (03) நாட்களுக்கு முன்னரும், பொதுக்கூட்டங்களை ஏழு (07) நாட்களுக்கு முன்னரும் அறிவித்தல் விடுத்தல்.
எ. பதவிநிலை மாறும்போது சகல ஆவணங்களையும் புதிய செயலாளரிடம் பொதுக்கூட்டத்திலேயே சமர்ப்பித்தல் வேண்டும்.

### 11.4 பொருளாளரின் கடமைகள்.

அ. மன்றத்தின் நிதிக்கு பொறுப்பாக இருத்தல்.
ஆ. நிர்வாகசபையின் அனுமதியுடன் நிதி சேகரித்தலும், செலவுகளை மேற்கொள்ளலும்.
இ. பெறப்படும் சகல நிதிகளுக்கும் பற்றுச்சீட்டு வழங்குதல்.
ஈ. மன்றத்தின் சொத்துக்களை பேணிப்பாதுகாத்தல்.
உ. செலவுறுதிச்சிட்டைகளில் தலைவரின் அங்கிகாரத்தை பெற்று கணக்குகளை தயாரித்தல்.
ஊ. ஆண்டிறுதியில் கொள்ளல் கொடுத்தல் கணக்கையும், பகுப்பாய்வு அறிக்கையையும் கணக்காய்வாளருக்கு சமர்ப்பித்தல்.
எ. பத்தாயிரம் (10,000.00) ரூபாவுக்கு மேல் பணத்தை கையிருப்பாக வைத்திருத்தல் ஆகாது.
ஏ. பதவிநிலை மாறும்போது சகல ஆவணங்களையும், பற்றுச்சீட்டு புத்தகங்களையும், கையிருப்பு பணத்தையும், பொதுச்சபை கூட்டத்தில் புதிய பொருளாளரிடம் கையளித்தல் வேண்டும்.

### 11.5 உப பதவிகள்.

தலைவர், செயலாளர் கருமமாற்றமுடியாத சந்தர்ப்பத்திலும், அவர்களால் குறித்தொதுக்கப்படும் கடமைகளை மேற்கொள்ளல்.

## 12. நிதி.

அ. நிதியாண்டு காலம் நான்காம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் அடுத்து வரும் மூன்றாம் மாதம் முப்பத்தொராம் திகதி வரையாகும்.
ஆ. நிதியாண்டு முடிவடைந்து இருமாத காலத்திற்குள் வருடாந்த பொதுக்கூட்டம் கூட்டப்பட வேண்டும்.
இ. இலங்கை வங்கியின் சேமிப்புக்கணக்கு மற்றும் நிலையான வைப்பு கணக்குகளில் மன்றின் நிதி வைப்பிலிடப்பட வேண்டும்.



Scanned by CamScanner

**13. உபயோகத்தில் இருக்கவேண்டிய பதிவேடுகள்.**

அ. பொதுச்சபை அங்கத்தவர் பதிவேடு.
ஆ. மாதாந்த, வருடாந்த கூட்ட அறிக்கை பதிவேடு.
இ. பொருட் பதிவேடு.
ஈ. காசுப் புத்தகம்.
உ. அடியிதழ் பற்றுச்சீட்டு புத்தகம்.
ஊ. வரவு, செலவு பதிவேடு.

**14. பொது.**

அ. தீர்மானம் எடுக்கமுடியாத சந்தர்ப்பங்களில் தலைவர் தற்துணிவின் அடிப்படையில் தீர்மானம் எடுக்க முடியும்.
ஆ. பொதுச்சபையின் அரைப்பங்கிற்கு மேற்பட்டவர்களின் விசேட தீர்மானத்திற்கமையவே தலைவரை விலக்க முடியும்.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**



Scanned by CamScanner